மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

89—

குடமுழுக்கு

***713—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியிலுள்ள அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலுள்ள அனைத்து திருக்கோயில்களிலும் திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்குச் செய்யப்படும் என்று இந்த மாமன்றத்தில் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், அய்யம்பாளையம், அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில், திருக்கோயில் நிதியின் மூலம் ரூபாய் 7 இலட்சம் செலவில் 5 கோபுரங்களுக்கு மராமத்துப் பணி செய்து வர்ணம் பூசுவதும், ரூபாய் 3 இலட்சம் செலவில் திருக்கோயில் மஹா மண்டபத்தில் கோட்டாகல் பதிக்கும் பணி, ரூபாய் ஒரு இலட்சம் செலவில் திருக்கோயில் அரசமரத்தடி விநாயகர் கோயில் மராமத்துப் பணி ரூபாய் 4 இலட்சம் செலவில் திருக்கோயில் நுழைவாயில் முன்புறம், வடபுறம் உள்ள ஓலைப்பந்தலை மாற்றி சிமெண்ட் சீட் அமைக்கும் பணி, ரூபாய் 30 இலட்சம் செலவில் திருக்கோயில் வளாகத்தில் அன்னதானக்கூடம் கட்டும் பணி ஆகிய திருப்பணி வேலைகளுக்காக

2011 செப்டம்பர் 7]

மொத்தம் ரூபாய் 45 இலட்சத்திற்கு உத்தேச மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. உத்தேச மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு முடிந்ததும், ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு உடனடியாக இந்த வேலைகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம்.

"வான்நோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி."

என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப எல்லா உயிர்களும் மழையை நம்பி வாழ்வதுபோல, ஏழரைக் கோடி தமிழ் மக்களும் தங்களது நல்லாட்சியை எதிர்பார்த்திருந்தவேளையில் கடந்த 5 ஆண்டுகாலமாக பகல் கொள்ளையடித்து வந்த நிலக் கொள்ளையர்களை விரட்டியடித்து நல்லாட்சி புரியும் தமிழகத்தின் காவல் தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) இனிமேல் தீய சக்திகளுக்குத் தமிழ்நாட்டில் இடமேயில்லை என்ற நிலையை உருவாக்கிய சிங்கநிகர்த் தலைவியே தங்கள் பொற்பாதம் தொட்டு வணங்குகின்றேன் தாயே!

தமிழகத்தின் தலைசிறந்த கோயில்களில் ஒன்றான அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் அறங்காவலர் குழுத் தலைவராக என்னை நியமித்தும், 1994 ஆம் ஆண்டு அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்ய ஆணையிட்ட ஆலயங்களின் அகல் விளக்கே! வாழைத்தோட்டத்து அய்யன் கோயில் குடமுழுக்கானது கடந்த 2007 ஆம் ஆண்டே நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால், கொள்ளையடிப்பது ஒன்றையே கொள்கையாக வைத்திருந்த கையாலாகாத கொள்ளையர்களின் ஆட்சியில் குடமுழுக்குச் செய்ய இயலவில்லை. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் கனிவுடன் பரிசீலித்து குடமுழுக்குச் செய்ய ஆவன செய்யுமாறு தங்களைப் பணிவுடன் வேண்டுகிறேன் தாயே!

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற புறநானூறு பாடலுக்கு ஏற்ப தங்களால் 362 திருக்கோயில்களில் ஏற்படுத்தப்பட்ட அன்னதானத் திட்டத்தை இந்த அய்யன் கோயிலுக்கும் நடைமுறைப்படுத்தினீர்கள் அம்மா. அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் கோயில் நிருவாகம் மூலமாக 15-5-1970 ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டு, 21-6-1980 ஆம் ஆண்டு அன்று வங்கக் கடல் ஓரத்திலே நீங்கா துயில் கொண்டிருக்கும் தங்க நிற மேனி தலைவரால் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு, தற்போது 1,344 மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றார்கள். அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் கோயிலுக்கு ஆண்டு வருமானம் ரூபாய் 2 கோடியாகவும், செலவு ரூபாய் 1 1/4 கோடியாகவும் உள்ளது. மேலும், வங்கிகளில் Deposit தொகையானது நான்கரை கோடி ரூபாய் உள்ளது. கோயிலுக்குச் சொந்தமான 10 ஏக்கர் நிலம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள். நீங்கள் இன்னும் எத்தனை பக்கங்கள் வைத்திருக்கிறீர்கள்? நேரம் ஆகிறது.

திரு. கே.பி. பரமசிவம்: முடித்துவிடுகிறேன். நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் வாழைத்தோட்டத்து அய்யன் கோயிலுக்கு நிருவாகத்தின் சார்பாக கலைக் கல்லூரி ஒன்றும், தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மூலக்கேள்வி குடமுழுக்கு பற்றியது. கலைக் கல்லூரி பற்றியது அல்ல. நீங்கள் மூலக்கேள்விக்குத் தொடர்புடைய கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக இதை விரைவில் நடத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "வாழைத்தோட்டத்து அய்யன் கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா" அதுதானே கேள்வி? மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

2011 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அம்மா அவர்கள் அறிவித்தபடி குடமுழுக்கு வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும். ஓராண்டு காலத்திற்குள் முடித்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "எல்லா கோயில்களுக்கும் இந்த ஆண்டு குடமுழுக்கு நடத்தப்படும்" என்று சொல்லியிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையிலும் "இந்த ஆண்டு" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அதையும் வாசிக்கவும்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: இந்த நிதியாண்டில் 89 கோயில்களைப் புனரமைப்பதற்கு . . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் இந்த ஆண்டு குடமுழுக்கு நடத்தப்படுவதாக, 106 கோயில்களை மாண்புமிகு அம்மா அவர்கள் புனரமைப்பு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், பேப்பரை எடுக்காதீர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: 106 கோயில்களில் அய்யன் கோயிலும் இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரியான கேள்வி இது. கேட்டாலும் ஒரு கேள்வியை நறுக்கென்று கேட்டீர்கள். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *ஏற்கெனவே இந்தக் கோயிலில் 100 நபர்களுக்கு அன்னதானத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேட்டது என்னவென்றால், 106 கோயில்களில் அந்தக் கோயிலும் இருக்கிறதா என்பது கேட்கிறார்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *106 கோயில்களுக்குக் குடமுழுக்கு செய்யப்படுகிறபொழுது, இந்தக் கோயிலுக்கும் சேர்த்து செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *உடனடியாக குடமுழுக்குச் செய்யப்படும் என்று கூறியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றி சொல்கிறார். கேள்வியைக் கேட்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி கல்யாண காமாட்சி திருக்கோயில் தமிழகத்தின் முதல் தாய்க் கோயில் என்று கூறப்படும் கோயிலாகும். அந்தக் கோயில் 18 கோணங்கள், 18 யானைகள், 18 படிகள் அமைந்துள்ள சங்க காலத்தைச் சேர்ந்த கோயில் ஆகும். அக்கோயிலில் அமாவாசைதோறும் பெண்கள் பெருந் திரளாகக்கூடி 18 படி பூஜை செய்யப்படுகிறது. தமிழகத்திலே, பெண்களே 18 படி பூஜை செய்யும் கோயில் தருமபுரி காமாட்சி அம்மன் கோயிலில் மட்டும்தான். அந்தக் காமாட்சி அம்மன் கோயிலில் திருமண நாளில் 50*

முதல் 75 திருமணங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இது அதிக மக்கள் வரக்கூடிய கோயிலாகும். இந்தக் கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்தித் தர வேண்டுமாய் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டினுடைய நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் 1006 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் நடைபெற்று, குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை இந்த அவைக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

90—

புனரமைத்தல்

***1533—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென் சென்னையில் வீராங்கல் ஓடையைப் புனரமைப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*